**செய்தி வெளியீடு எண்:607** **நாள் : 02.12.2014**

**செய்தி வெளியீடு**

**பறவை காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள்**

கேரள மாநிலத்தில் ஆலப்புழா மற்றும் கோட்டையம் மாவட்டஙகளில் பறவைக் காய்ச்சல் நோய் கண்டறியப்பட்டுள்ளதாக இந்திய அரசு 25.11.2014 அன்று அறிவிப்பு வெளியிட்டதை தொடர்ந்து **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டிற்கு முட்டைகள் மற்றும் கோழித் தீவனம் மூலம் பறவைக்காய்ச்சல் நோய் தொற்று ஏற்படாமல் தடுப்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 26.11.2014 அன்று கூட்டம் நடைபெற்றது. அன்றே 2வது மாநில அளவிலான பணிக்குழு கூட்டம் (2nd Task Force meeting) தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது, இதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் பறவைக் காய்ச்சல் தடுப்பது தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகள் குறித்து **இன்று கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. டி.கே. எம். சின்னையா அவர்கள் தலைமையில்** கால்நடை பராமரிப்பு (ம) மருத்துவப் பணிகள் இயக்குநர் அலுவலகத்தில் செயலர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, இயக்குநர், கால்நடை பராமரிப்பு (ம) மருத்துவப் பணிகள், இயக்குநர் பொதுசுகாதாரத்துறை மற்றும் கூடுதல் முதன்மை தலைமை வன பாதுகாவலர் ஆகியோரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மண்டல இணை இயக்குநர்கள், உதவி இயக்குநர், கால்நடை நோய் புலனாய்வு பிரிவு பறவை காய்ச்சல் குறித்து மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் அதிவிரைவு செயலக்க குழு (RRT), மஸ்தூர், கோழி பண்ணையாளர்களுக்கு பொது சுகாதாரத்துறை, வனத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறையுடன் இணைந்து பறவை காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பயிற்சி அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுத்தினார்.

மேலும் கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்குள் வாகனஙகள் வரும் சோதனைச் சாவடிகள் அனைத்திலும் 24 மணி நேரமும் செயல்படும் கண்காணிப்புக் குழுவின் செயல்படுவது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழகத்தில் நுழையும் அனைத்து வாகனஙகளும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு தமிழ்நாட்டிற்கு நோய் வராத வண்ணம் முழுவீச்சில் செயல்படுவது குறித்தும் கேரளாவிலிருந்து

கடந்த ஒருமாதத்தில் வாங்கி வரப்பட்ட முட்டைகள், கோழி மற்றும் வாத்து குஞ்சுகள் கண்டறியப்பட்டு அழிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

எந்த சூழ்நிலையினையும் எதிர்கொள்ளும் வகையில் ஒவ்வொரு குழுவிலும் ஒரு கால்நடை உதவி மருத்துவர், ஒரு கால்நடை ஆய்வாளர், 2 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் கொண்ட 1061 அதிவிரைவு செயலாக்க குழுக்கள் அமைக்கப்பட்டு இருப்பதையும் இவ் அதிவிரைவு குழுவினருக்கு (Rapid Response Team - RRT) தேவையான சுயபாதுகாப்பு உபகரணங்கள் தேவையான அளவில் இருப்பு இருப்பது பற்றியும் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் 24 மணிநேரமும் செயல்படக்கூடிய தொலைபேசி எண்கள் 044–24339097, 9445032504 சைதாப்பேட்டை மத்திய நோய் ஆய்வு கூடத்தில் அமைக்கப்பட்டு இயங்கி வரும் கட்டுப்பாட்டு அறையின் செயல்பாட்டினையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்.

மேலும் மாவட்ட ஆட்சியர்கள், பொது சுகாதாரத்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, தென்னக இரயில்வே, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ், வணிகவரித்துறை, தேசிய முட்டை உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு, கோழிப் பண்ணையாளர்கள் சங்கம், கறிக்கோழி உற்பத்தியாளர்கள் ஆகியவற்றை ஒருங்கிணைந்து தமிழகத்தில் கேரளாவில் இருந்து பறவைகாய்ச்சல் நோய் வராமல் இருக்க அனைத்து தொடர் நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**